


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் அணைக்கட்டில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், வேலூர் மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார், அணைக்கட்டு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் . மு. பாபு, அணைக்கட்டு மத்திய ஒன்றிய கழக செயலாளர் பி. வெங்கடேசன், அணைக்கட்டு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ. குமாரபாண்டியன், வேலூர் ஒன்றிய கழக செயலாளர் சி.எல். ஞானசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் அணைக்கட்டில் கட்டப்பட்டுள்ள கலைஞர் அறிவாலயத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ., அணைக்கட்டு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மு. பாபு, அணைக்கட்டு மத்திய ஒன்றிய கழக செயலாளர் பி. வெங்கடேசன், அணைக்கட்டு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோ. குமாரபாண்டியன், வேலூர் ஒன்றிய கழக செயலாளர் சி.எல். ஞானசேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (25.6.2025) வேலூர் மாவட்டம், பூதூரில் "கலைஞர் கனவு இல்லம் ஆய்வின்போது, ஐந்தாம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவி முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் பள்ளியில் காலை சிற்றுண்டி உண்டு பயன்பெற்று வருவதாக தெரிவித்து, அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.



முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் அணைக்கட்டில் கட்டப்பட்டுள்ள கலைஞர் அறிவாலயதை திறந்து வைத்து. அங்குள்ள தளபதி நூலகத்தை பார்வையிட்டார்.



ஏற்கனவே இருந்த வீட்டின் புகைப்படம்



தற்போது கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் வீட்டின் புகைப்படம்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூர் மாவட்டம், பூதூரில் கலைஞர் கனவு இல்லம் பயனாளி ஒருவரின் தமிழநாடு இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது குடும்பத்தினருடன் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கடந்த 4 ஆண்டுகளில் 39,811 பேருக்கு பட்டாக்கள்

# வேலூர் மாவட்டத்தில் 21,776 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**வேலூர், ஜூன் 26 -**

**வேலூர் மாவட்டத்தில் ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

நான்கு ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் மட்டும் மொத்தம் 39,811 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.6.2025) வேலூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களுக்குட்பட்ட கிராமங்களில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ் மற்றும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிலங்களை வரன்முறை செய்து 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் அடையாளமாக 12 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

அதன்படி, ஒருமுறை சிறப்பு வரன்முறை திட்டத்தின் கீழ், வருவாய் நிலையாணை எண்.21(6)-ன்படி கிராம நத்தமாக வகைபாடு மாற்றம் செய்து வழங்கப்பட்ட பட்டா - 2074, அரசாணை நிலை எண் 318-ன்படி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா (நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகள் தவிர) - 1330, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கிரையம் பெற்றவர்களுக்கு உட்பிரிவு செய்து வழங்கப்பட்ட பட்டா - 10,000, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கிரையம் பெற்றவர்களுக்கு உட்பிவு செய்து வழங்கப்பட்ட பட்டா - 212, அரசாணை நிலை எண் 612-ன்படி, சர்க்கார் மனை வகைபாட்டிலிருந்து இரயத்துமனைகளாக மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்ட பட்டா - 240, ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் பட்டா வழங்கப்பட்டு தற்போது இணையவழியில் வழங்கப்பட்ட பட்டா - 4,525, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் பட்டா வழங்கப்பட்டு தற்போது இணையவழியில் வழங்கப்பட்ட பட்டா - 1,473, அரசாணை நிலை எண் 97-ன்படி, நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் ஆக்கிரமிப்பாளர்களுக்கு வரன்முறை செய்து வழங்கப்பட்ட பட்டா - 1922, என மொத்தம் 21,776 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டுகளில் வேலூர் மாவட்ட வருவாய் வட்டங்களில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான இணைய வழி பட்டா மற்றும் நத்தம் வகைபாடு உள்ளிட்ட அனைத்து இனங்களில் 18,035 பட்டாக்கள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் வழங்கப்பட்ட 21,776 பட்டாக்களையும் சேர்த்து மொத்தம் 39,811 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜெகத்ரட்சகன், கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.வே.இரா. சுப்புலெட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாகை - மயிலாடுதுறை - தஞ்சை - திருச்சி மாவட்டங்களில்

# பாக நிலை முகவர்கள் கூட்டம்!

### கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!



கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி, பெரம்பலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் (மேற்கு) மாவட்டங்களில் பாக நிலை முகவர்கள் 2 (BLA2) கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்ற கூட்டத்தை கீழ்க்கண்ட தேதிகளில் சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் கூட்டிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | நேரம் | இடம் |
|---|---|---|
| 26.06.2025 | காலை 9.30 மணி<br>மாலை 4.00 மணி | நாகப்பட்டினம் மாவட்டம்<br>மயிலாடுதுறை மாவட்டம் |
| 28.06.2025 | காலை 9.30 மணி | தஞ்சாவூர் தெற்கு மாவட்டம்<br>பட்டுக்கோட்டை |
| | மதியம் 12.30 மணி | தஞ்சாவூர் மத்திய மாவட்டம்<br>தஞ்சாவூர் |
| | மாலை 4.30 மணி | தஞ்சாவூர் வடக்கு மாவட்டம்<br>கும்பகோணம் |
| 29.06.2025 | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய மாவட்டம் |

**கே.என்.நேரு**

கழக முதன்மைச் செயலாளர் / நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்